**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts05sp052026.13
https://ngmtamil.in/

# Neem in the life of Sangam period people

**Dr. R. Mathanraj, M.A., B.Ed., SET., NET., Ph.D. (BDU)*,**
Assistant Professor, Department of Tamil, Srinivasan College of Arts and Science, Perambalur - 621 212.
ORCiD: https://orcid.org/0009-0005-3631-433X.
*Correspondence: mathantamil91@gmail.com, Tel: 7373458170

**Article Info**
Received on 15-May-2026, Revised on 18-May 2026, Accepted on 20-May-2026, Published on 27-May-2026

## ABSTRACT

The neem tree (Azadirachta indica) occupied a significant place in the lifestyle and cultural practices of the Sangam people. The people of the Sangam age possessed extensive knowledge of the characteristics and benefits of the neem tree and integrated its various parts, including its fruits, leaves, flowers, and bark, into their daily lives. Sangam literary sources reveal that neem trees served multiple functions, such as providing shade, acting as protective or guardian trees, and contributing to the well-being of communities. The Sangam people recognized the medicinal and antimicrobial properties of neem and cultivated it around their homes and settlements to promote a healthy and disease-free environment. References found in Sangam literature demonstrate not only the indispensable role of the neem tree in their social and cultural life but also their advanced understanding of botanical knowledge and traditional healthcare practices. These literary evidences highlight that the principles of herbal medicine, widely appreciated in contemporary times, were already well understood and practiced by the ancient Tamils. Thus, the study of neem-related references in Sangam literature reflects the ecological awareness, indigenous scientific knowledge, and refined cultural values of early Tamil society.

**Keywords**; *Sangam Literature; Neem Tree; Traditional Knowledge; Herbal Medicine; Tamil Culture; Ethnobotany; Indigenous Healthcare.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

# சங்க கால மக்கள் வாழ்வியலில் வேம்பு

*முனைவர் இரா.மதன்ராஜ் M.A.,B.Ed.,SET.,NET.,Ph.D(BDU).

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, சீனிவாசன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,

பெரம்பலூர்.621212.

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க கால மக்கள் வாழ்வியலில் ஓர் அங்கமாக வேப்பமரம் திகழ்கிறது. வேப்ப மரத்தின் இயல்புகளை தெள்ளிதின் அறிந்து வைத்திருந்தனர். இதனுடைய காய், இலை, பூ, மரப் பட்டை என அனைத்தும் மக்கள் வாழ்வியலோடு இணைந்திருந்து காணப்படுகிறது. மேலும், காவல் மரமாகவும், நிழல் தரும் இடமாகவும் பயன்படுகின்றன. வேப்ப மரம் கிருமி நாசினி என்பதை அன்றே சங்க கால மக்கள் அறிந்திருந்து தங்கள் வீட்டைச் சுற்றிலும், ஊர்களிலும் வேப்ப மரத்தை நட்டு நோயற்ற வாழ்வினை வாழ்ந்துள்ளனர். இவர்களுடைய வாழ்வியலில் வேப்ப மரம் பெறும் இன்றியமையாமையையும் அவர் தம் தாவர அறிவையும் பெற்றிருந்ததைச் சங்க இலக்கியங்கள் வழி அறிந்து கொள்ள முடிகின்றன. இன்று உயர்வாகப் பேசப்படும் மூலிகை மருத்துவ அறிவை அன்றே நம் தமிழ் மக்கள் உணர்ந்திருந்தது அவர்தம் உயரிய பண்பட்ட வாழ்வை வெளிபடுத்துவதாக உள்ளது.

**திறவுச் சொற்கள்**

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, மன்றங்கள், மனைகள், காவல் மரங்கள், விளையாட்டுகள், வழிபாடுகள் போன்றவை ஆகும்.

**முன்னுரை**

வேப்ப மரம் வேம்பு என்று அழைக்கப்படுகிறது. பழந்தமிழர்கள் தங்களுடைய இருப்பிடத்தைச் சுற்றி வேப்ப மரங்களை நட்டு பேணி காத்தனர். நோய் நீக்கும் கிருமி நாசினியாக வேப்பமரத்தின் இலைகள், காய்கள், பழங்கள், மரப் பட்டைகள் செயலாற்றுகின்றன. இந்த மரத்திலிருந்து வெளிவரும் காற்று உடலுக்கு ஆரோக்கியத்தைத் தருகிறது. இதனால் தான் மக்கள் வீட்டைச் சுற்றி வேப்ப மரத்தை வளர்த்து வருகின்றனர்.

**வேப்ப மரம்**

வேப்ப மரம் மிகுதியான அளவில் தென் மாநிலங்களில் தான் காணப்படுகிறது. அதனால் தான் இந்தியாவின் பொக்கிஷமாகத் திகழ்கிறது. இதன் தாவரவியல் பெயர் **"அசாடிராக்டா இண்டிகா - Azadirachta indica"**[1] என்று அழைக்கப்படுகிறது. மேலும், வேப்ப மரத்திற்கு, **"அகுனாதி, அசிசு, அகசமுட்டி, சங்குமரு, சீரிண பன்னன், பிசு, பிசிதம், மாலுகம், சாகாதம், விருந்தம், நலதம்பு, நிம்பம், பூநிம்பம், வச்சரி, வாதாரி, விசுமிகினி, வருட்டம், பூயாதி, அருக்க பாதவம், அருட்டம்"**[2] எனப் பல்வேறு பெயர்கள் வழங்கப்படுகிறது.

**வேப்ப மரத்தின் வகைகள்**

வேப்ப மரமானது, **"கருஞ்சினை வேம்பு, கருஞ்சின விறல் வேம்பு, கருங்கால் வேம்பு, மன்ற வேம்பு, கோட்டு இணர் வேம்பு, பொரி அரை வேம்பு, குறுஞ்சினை வேம்பு, பராரை வேம்பு, அலர் தார் வேம்பு, வாடா வேம்பு, சினை அலர் வேம்பு, ஒண் பூ வேம்பு, கான வேம்பு"[3]** என்று பல்வேறு வகைகளில் காணப்படுகிறது.

வேப்ப மரம் இந்தியாவில் உத்திரப் பிரதேசத்திற்கு அடுத்தப்படியாகத் தமிழகத்தில் தான் மிகுதியான எண்ணிக்கையில் காணப்படுகிறது. தமிழர் தம் வாழ்வியல் கலாச்சாரத்தின் இன்றியமையாத அங்கமாகவும், ஆன்மிகக் கலாச்சாரத்தோடு ஒன்றிணைந்தும் செயல்படுவதால் பல்லாயிரம் ஆண்டுகள் கடந்தும் இன்றும் வேம்பு நிலைத்து நிற்கிறது. எனவே தான் **"எல்லா மரங்களிலும் வேம்பு மருந்தாகித் தப்பாமரம்"[4]** என்று ச.வே.சுப்பிரமணியன் குறிப்பிடுகிறார்.

**மன்றங்களில் வேம்பு**

ஊரின் நடுப்பகுதியை மன்றம் என்று அழைப்பர். இந்த மன்றம் பெரிய மரத்தைக் கொண்டதாகக் காணப்படுகிறது. மரத்தின் அடியில் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து பேசுவது வழக்கமாகும். இந்த மன்றம் வேப்ப மரத்தினடியில் இடம் பெற்றிருந்ததை,

**"மன்ற வேம்பின் மாச்சினை ஒண் தளிர்"[5]**

என்றும்,

**"............ ............. வேம்பின் ஒண் தளிர்
நெடுங் கொடி உழிஞை பலரோடு மினந்து"[6]
"மன்ற வேம்பின் ஒண்குழை மலைந்து"[7]**

என்றும் புறநானூற்றுப் பாடல்கள் தெரிவிக்கின்றன. இதன் வாயிலாக மன்றங்கள் இருந்ததையும் மக்கள் அதனுடைய இலைகளைப் பறித்துச் சூடிக் கொண்டதையும் அறியமுடிகிறது. **"வேப்ப மரம் கிளைகளைப் பரப்பித் தழைத்திருக்கும். இதன் அடி நிழலில் பலரும் கூடுவதால் மன்றம் ஆயிற்று. இதனால் மன்ற வேம்பு எனப்பட்டது"[8]** என்று கோவை.இளஞ்சேரன் குறிப்பிடுகிறார். இதன் மூலம் மக்கள் கூடிப் பேசும் மன்றங்களில் வேப்ப மரம் இருந்த ஆரோக்கியமான வாழ்வியலைக் காணமுடிகிறது.

**மனைகளில் வேம்பு**

மக்கள் தலையில் வேப்பிலை, வேப்பெண்ணெய் போன்றவற்றை பயன்படுத்துவற்குக் காரணம் அது மிகச்சிறந்த கிருமி நாசினியாகக் காணப்படுவதால் தான் மக்கள் பயன்படுத்துகின்றனர். இவ்வழக்கம் இன்றும் பயன்பாட்டில் உள்ளது. விழாக் காலங்களிலும், நோய் பரவும் காலங்களிலும் மக்கள் தங்களுடைய இல்லத்தில் வேப்பிலையைக் கட்டி வைத்தனர். இதன் மூலம் நோய்த் தொற்றுப் பரவாமல் தடுத்தனர். இதனை,

**"தீம் கனி இரவமொடு வேம்பு மனைச் செரீஇ"[9]**

என்று புறநானூறு தெரிவிக்கின்றது. இதன் மூலம் மக்கள் தங்களுடைய வீடுகளில் வேப்பிலைக் கட்டியதை அறியமுடிகிறது. வேம்பின் மருத்துவக் குணத்தைப் பற்றி ச.வே.சுப்பிரமணியன் **"மாதத்தில் ஒருமுறை வேப்பெண்ணெய் தேய்த்துக் குளிக்கலாம். தலையில் உள்ள பேன், பொடுகு போன்றவை நீங்கும்"**[10] என்று குறிப்பிடுகிறார். மேலும் **"அன்றாட வாழ்க்கைக்கு வீட்டைச்சுற்றி இரண்டு, மூன்று வேம்பு மரங்கள் இருந்தால் மிகவும் நல்லது. வேப்பங் காற்று நோய்க் கிருமிகளை அகற்றும் இயல்புடையது"**[11] என்றும் கூறுகிறார். இதன் மூலம் சங்க காலத்தில் மக்கள் வேப்ப மர வாழ்வியலோடு உறவாடியத்தை உணரமுடிகிறது.

**காவல் மரங்களில் வேம்பு**

சங்க கால மன்னர்களின் காவல் மரங்களில் வேப்ப மரமும் ஒன்றாகும். இம்மரம் மோகூர் என்ற மன்னனின் காவல் மரமாகத் திகழ்கிறது. இதனை,

> **"மோகூர் மன்னன் முரசம் கொண்டு**
> **நெடுமொழி பணித்து அவன் வேம்பு முதல் தடிந்து"**[12]

என்கிறது பதிற்றுப்பத்துப் பாடல். மோகூர் என்ற மன்னனின் காவல் மரமான வேப்ப மரத்தை வெட்டி வீழ்த்தி முரசு செய்து சேரனின் வெற்றியை நிலைநாட்டப் பட்டதை இப்பாடல் குறிப்பிடுகிறது. மேலும்,

> **"கருஞ்சினை விறல் வேம்பு அறுத்த**
> **பெருஞ்சினைக் குட்டுவற் கண்டனம் வரற்கே"**[13]

என்னும் பதிற்றுப்பத்துப் பாடல்களிலும், மோகூர் மன்னனின் காவல் மரத்தை வெட்டி வீழ்த்திய சேரனின் வெற்றிச் சிறப்பினைக் காணமுடிகிறது. போர்க்களத்தில் எதிர் எதிரே நின்று சண்டையிட்டு வென்றாலும் தோற்றவனின் காவல் மரத்தை வெட்டி வீழ்த்துவதையே பெரும் வெற்றியாக நினைத்த அக்கால மன்னர்களின் வீரவுணர்வையும் வாழ்வியலையும் அறிந்துக்கொள்ள முடிகிறது.

**அடையாளப் பூக்களில் வேம்பு**

சங்க காலத்தில் பேரரசர்களாக சேரர், சோழர், பாண்டியர் என மூவேந்தர்கள் ஆட்சி செய்தனர். அவர்களுக்கென அடையாளமாகப் பூக்கள் காணப்பட்டன. அவற்றில் பாண்டியனுக்கு வேப்பம்பூ அடையாளமாக அணிந்தனர். இதனை,

> **"காத்தல்சால் செங்கோற் ஆடவர் கடுமான் நெடுவழுதி**
> **ஏத்தல்சால் வேம்பின் இணர்"**[14]
> **"அரண் பல கடந்த முரண் கொள் தானை**
> **வாடா வேம்பின், வழுதி கூடல்"**[15]

என்று புறப்பொருள் வெண்பாமாலையும் அகநானூறும் பாண்டிய மன்னன் அடையாளப்பூவாக வேப்பம்பூ காணப்படுவதை உணர்த்துகிறது.

**விளையாட்டுகளில் வேம்பு**

மக்கள் சமத்துவத்தைத் தெளிவுபடுத்தும் காரணிகளில் ஒன்று விளையாட்டு ஆகும். சிறுவர்கள் மரத்தின் அடியிலும், கடற்கரையிலும் விளையாடி மகிழ்வார்கள். இதனை,

**“பொரி அரை வேம்பின் புள்ளிநிழல்**
**கட்டளை அன்ன இட்டு அரங்கு இழைத்து**
**கல்லா சிறாஅர் நெல்லி வட்டு ஆடும்”[16]**

என்னும் நற்றிணை பாடல் வழி, சிறுவர்கள் வேப்ப மரத்தின் நிழலில் நெல்லிக்காய்களைக் கொண்டு விளையாடியதை அறியமுடிகிறது. மக்கள் வாழும் இடங்களில் வேப்ப மரங்கள் வளர்க்கப் பட்ட வாழ்வியலைக் காணமுடிகிறது.

**வேப்பங் காயின் இயல்பு**

வேப்ப மரத்தின் காய்கள் கசப்புத் தன்மையுடையவை, கனிகள் இனிப்புத் தன்மை உடையதாக இருக்கும். ஆனால் தலைவி தனக்கு வேப்பங் காய் தரும் போது கசப்பான வேப்பங் காயை இனிப்புச் சுவை உடையதாகத் தலைவி கூறுகிறாள். இது தலைவன் தலைவியின் காதலை உயர்வுப் படுத்துவதாக அமைகிறது. இதனை,

**“வேம்பின் பைங்காய் என் தோழி தரினே**
**தேம் பூங்கட்டி என்றனீர்”[17]**

என்னும் குறுந்தொகை பாடல் தெளிவுறுத்துகின்றது. தலைவி கையால் வேப்பங் காயைக் கொடுக்கும்போது அது இனிப்பாக இருக்கின்றது என்று வேப்பங் காயைக் குறிப்பிடுவதிலிருந்து அக்காலக் காதல் சிறப்பையும், அவர்கள் வாழ்வியலில் வேப்ப மரம் ஒன்றிணைந்து இருந்ததையும் அறியமுடிகிறது.

**வழிபாடுகளில் வேப்பமரம்**

சங்க கால மக்கள் மரங்களை இறை வழிபாட்டோடு இணைத்து வணங்கி வந்துள்ளனர். அந்த மரங்களில் தெய்வம் உறைந்திருப்பதாகவும் அதனைக் கோவிலாகவும் கடவுளாகவும் எண்ணி வழிபட்டுள்ளனர். இதனை,

**“வயவாள் எறிந்து வில்லின் நீக்கி**
**பயம்நிரை தழீஇய கடுங்கண் மழவர்**
**அம்புசேண் படுத்து வன்புலத்து உய்த்தென**
**தெய்வம் சேர்ந்த பராரை வேம்பில்**
**கொடுப்பு ஆஎறிந்து குறிதி கூஉய்**
**புலகூப் புழுங்கு உண்ட வாண்கண் அகல்அறை”[18]**

என்று அகநானூறு பாடல் விவரிக்கின்றது.

வெட்சி வீரர்கள் கரந்தை வீரர்களோடு போரிட்டுப் பசுக் கூட்டத்தைக் கவர்ந்து வேப்ப மரத்தின் அடியில் நன்றாகக் கொழுப்பு அதிகம் உடைய பசுவினைக் கொன்று அதன் குருதியை வேப்ப மரத்தில் தெளித்து, வழிபட்டுக் கொன்ற பசுவினைச் சமைத்து உண்டனர். **“எல்லா கோவில்களிலும் தலவிருட்சமாக ஒரு மரம் இருக்கும். ஆனால் மரமே தெய்வமாக, கோவிலாகப் பூஜிக்கப் படுவது இந்த வேம்பு மட்டும் தான்”[19]** என்று ஆர்.கே.பாரதநேசன் குறிப்பிடுகிறார். மேலும்,

> **“அரவாய்க் கடிப்பகை ஐயவிக் கடிப்பகை**
> **விரவிய மகளிர் ஏந்திய தூமத்துப்”[20]**

என்று மணிமேகலை பாடல், வீரர்கள் வீட்டில் வேப்பிலை கட்டுதல் பழக்கம் இருந்துள்ளதைத் தெரிவிக்கின்றது. இன்றும் போகி பண்டிகையின் போது மக்கள் தங்கள் வீடுகளிலும், வயல்களிலும் வேப்பிலையைக் கட்டுவதுண்டு. பண்டைய தமிழர்கள் **“சுவடிகள் வேப்பிலை மேல் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன”[21]** என்று கு.வி.கிருஷ்ணமூர்த்தி குறிப்பிடுகிறார்.

வேப்பிலை ஒரு கிருமி நாசினியாக இன்றும் கருதப்படுகிறது. அம்மை, சின்னம்மை போன்ற நோய்களின் போது வீட்டின் முன் வேப்பிலை செருகி பிறருக்கு அறிவித்துள்ளனர். அம்மை நோயால் பாதிக்கப்பட்டவர்கள் வேப்பிலையின் மீது படுக்க வைக்கப்படுகின்றனர். வேப்ப மரக் காற்று உடல் நலத்திற்கு நன்மை பயக்கும் என்பதை உணர்ந்து வீடுகளில் இன்றும் மக்கள் வேப்ப மரங்களை வளர்த்து வருகின்றனர். மக்களின் வாழ்வியலில் இரண்டறக் கலந்த ஓர் உறுப்பாக வேப்ப மரம் காணப்படுவதைச் சங்க இலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகிறது.

**முடிவுரை**

மக்கள் வாழ்க்கைச் சூழலில் வேப்ப மரம் ஓர் அங்கமாகத் திகழ்கிறது. மன்னர்களுக்கு காவல் மரமாகவும், பூக்கள் அடையாளமாகவும், வீட்டில் வளர்க்கும் மரமாகவும், பொதுமக்கள் பேசும் மன்றங்களிலும், வழிபாட்டு முறைகளில் தெய்வமாகவும் காணப்படுகிறது. வேப்ப மரத்தின் இலைகள், காய்கள், பழங்கள், மரப் பட்டைகள், பூக்கள் போன்றவை சங்க காலம் முதல் தற்காலம் வரை மக்களுக்கு மருத்துவக் களஞ்சியமாக இருப்பதை உணரமுடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. இரா.பஞ்சவர்ணம்,தொல்காப்பியரின் தொல்காப்பியத் தாவரங்கள், ப.278.
2. சா.ஆனந்தகுமார்,தாவரங்கள் விலங்குகள் பறவைகளைக் குறிக்கும் பல்வேறு பெயர்கள்,ப.47.
3. ஆர்.கே.பாரதநேசன்,மனிதனுக்கு எல்லாமே மரம் தான்,ப.32.
4. ச.வே.சுப்பிரமணியன்,தமிழர் வாழ்வில் தாவரம்,ப.39.
5. கு.வே.பாலசுப்பிரமணியண்(உ.ஆ.),புறநானூறு,பா.76:4.
6. மேலது,பா.77:2-3.
7. மேலது,பா.79:2.
8. கோவை.இளஞ்சேரன்,இலக்கியம் ஓர் பூக்காடு,ப.335.
9. கு.வே.பாலசுப்பிரமணியண்(உ.ஆ.),புறநானூறு,பா.281:1.
10. ச.வே.சுப்பிரமணியன்,தமிழர் வாழ்வில் தாவரம்,ப.35.

11. மேலது,ப.38.
12. அ.ஆலிஸ்,பதிற்றுப்பத்து,பா.44:14-15.
13. மேலது,பா.49:16-17.
14. புலியூர்க்கேசிகன்(உ.ஆ.),புறப்பொருள் வெண்பாமாலை,நூ.241:3-4.
15. இரா.செயபால்(உ.ஆ.),அகநானூறு,பா.93:8-9.
16. கு.வே.பாலசுப்பிரமணியண்(உ.ஆ.),நற்றிணை,பா.3:2-3.
17. வி.நாகராசன்(உ.ஆ.).,குறுந்தொகை.,பா.எண்.196:1-2.
18. இரா.செயபால்(உ.ஆ.),அகநானூறு,பா.309:1-6.
19. ஆர்.கே.பாரதநேசன்,மனிதனுக்கு எல்லாமே மரம் தான்,ப.26.
20. துரை.தண்டபாணி(உ.ஆ.).,மணிமேகலை.,கா.7.அடி.73.
21. கு.வி.கிருஷ்ணமூர்த்தி,தமிழரும் தாவரமும்,ப.256.

**துணைநூற் பட்டியல்**

1. ஆலிஸ்.அ.(உ.ஆ.),பதிற்றுப்பத்து, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்,சென்னை,ஐந்தாம் பதிப்பு.2014.
2. அனந்தகுமார்.சா, தாவரங்கள் விலங்குகள் பறவைகளைக் குறிக்கும் பல்வேறு பெயர்கள், அறிவுப் பதிப்பகம், சென்னை.இரண்டாம் பதிப்பு-2011.
3. இளஞ்சேரன்.கோவை,இலக்கியம் ஓர் பூக்காடு,இராக்கோர்ட்டு பப்ளிகேசன்,சென்னை.1982.
4. கிருஷ்ணமூர்த்தி.கு.வி, தமிழரும் தாவரமும், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி.மூன்றாம் பதிப்பு-2011.
5. சுப்ரமணியன்.ச.வே, தமிழர் வாழ்வில் தாவரம், மெய்யப்பன் பதிப்பகம்,சிதம்பரம்,முதற் பதிப்பு-2014.
6. செயபால்.இரா(உ.ஆ.),அகநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்,சென்னை,ஐந்தாம் பதிப்பு.2014.
7. தண்டபாணி.துரை,(உ.ஆ.), மணிமேகலை, உமா பதிப்பகம், சென்னை, நான்காம் பதிப்பு. 2010.
8. நாகராசன்.வி(உ.ஆ.).,குறுந்தொகை., நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்.,சென்னை. ஐந்தாம் பதிப்பு., அக்டோபர்-2014.
9. பஞ்சவர்ணம.இரா, தொல்காப்பியரின் தொல்காப்பியத் தாவரங்கள்,தாவரத் தகவல் மையம்,பண்ணுருட்டி,இரண்டாம் பதிப்பு-2013.
10. பாரதநேசன்.ஆர்.கே,மனிதனுக்கு எல்லாமே மரம் தான், மணிமேகலை பிரசுரம்,சென்னை,முதற்பதிப்பு-2017.
11. பாலசுப்பிரமணியன்.கு.வே,(உ.ஆ.),நற்றிணை.நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி.) லிட்.சென்னை.ஐந்தாம் பதிப்பு - 2014.
12. பாலசுப்பிரமணியன்.கு.வே,(உ.ஆ.),புறநானூறு.நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி.) லிட்.சென்னை.ஐந்தாம் பதிப்பு - 2014.
13. புலியூர்க்கேசிகன்(உ.ஆ.), புறப்பொருள் வெண்பாமாலை,சாரதா பதிப்பகம்,சென்னை.முதற் பதிப்பு-2009.